மக்கோணாவுக்குப போகிறேன்

சிறி

(ஒரு பேப்பருக்காக)

முன்னர் நான் என்ரை நண்பன் இருள் அழகனுக்காக காதல் கடிதம் எழுதி பிடிபட்டது பற்றி படிச்சிருப்பீங்கள். அதாலை கோபம் வந்த எங்கடை பாடசாலை அதிபர் என்னைப்போய் என்ரை அப்பாவை கட்டாயம் கூட்டிக் கொண்டு வரச் சொல்லிப் போட்டார்.

அதுக்கு முதல்லை வேறை பிரச்சனையளுக் கெல்லாம் நான் அம்மாவை இல்லாட்டி அம்மம் மாவை கூட்டிக்கொண்டு போய் சமாளிச்சிட்டன் ஆனால் அந்தத் தடவை கட்டாயம் அப்பா வோடைதான் வரவேணும் எண்டு சொல்லிப் போட்டார் காரணம் அப்பாவும் அதிபரும் நல்ல பழக்கமானவை. அதே நேரம் என்ரை சித்தப்பா ஒருத்தரும் அங்கை படிப்பிச்சவர் அவரையும் கூப்பிட்டு என்ரை வீட்டிலை சொல்லி விடச் சொல்லிப் போட்டார்.

எல்லாத்துக்கும் முதலிலை எங்கடை மானிப் பாய் இந்து பாடசாலை அதிபரைப்பற்றி ஒரு வசனம் சொல்ல வேணும். அண்மையிலை ரஜனி நடிச்ச சிவாஜி படத்திலை 'பேரைக் கேட்டாலே சும்மா அதிருதில்லை' எண்டொரு வசனம் வருமல்லோ அது சும்மா வசனம் தான் ஆனால் எங்கடை அதிபர் சாறியின்ரை (அவரது சுருக்கமான பெயர்) பெயரை கேட் டாலே மானிப்பாய் இந்து உண்மையிலேயே அதிரும். அப்படி ஒரு கண்டிப்பு கடமை யுணர்வான அதிபர். அவரைக்கண்டால் தவறு செய்த மாணவர்கள் மட்டுமில்லை வாத்திமாரே அதிருவினம். அப்பிடி இருந்ததாலைதான் என்னை மாதிரி மாணவனையெல்லாம் கட்டிமேச்சவர்.

சரி என்ரை விசயத்துக்கு வாறன்.இருள் அழகன் கெஞ்சிக் கேட்டதாலைதான் நான் அவனுக்காக கடிதம் எழுதிகுடுத்தனான் எண்டு ஒரு மாதிரி அம்மாவிட்டை சொல்லி அப்பாக்கு தூதுவிட்டு அப்பாவையும் கூட்டிக் கொண்டு பள்ளிக்கூடம் போனன்.

அதிபரின்ரை அறையிலை நான் கையைக் கட்டிக்கொண்டு நிக்க அப்பாவிட்டை அதிபர் என்ரை திருகுதாளங்களை ஒவ்வொண்டாய் எடுத்து வைச்சார். அதையெல்லாம் அடிக்கடி என்னை கோபத்தோடை திரும்பி திரும்பி பாத்தபடியே அப்பாகேட்டுக்கொண்டிருந்ததை பாக்க ஏதோ வில்லங்கமா நடக்க போகு தெண்டு விழங்கிட்டுது.

அதேநேரம் வந்த விசயத்தை விட்டிட்டு பழங்கதையெல்லாத்தையும் கதைச்சுக் கொண்டிருக்கிறாரெண்டு அதிபரிலையும் எரிச் சலாய் வந்தது.

கதைச்சு முடிய அதிபரை பாத்து அப்பா சொன்னார் எங்கடை குடும்பத்திலை பலபேர் இந்தப் பள்ளிக்கூடத்திலைதான் படிச்சவை இந்தப் பள்ளிக்கூடத்துக்கெண்டு ஒரு நல்ல பெயர் இருக்கு அது என்ரை மகனாலை கெடக் கூடாது அதாலை அவனின்ரை சேட்டி பிக்கற்றை தாங்கோ நான் இவனைக் கொண்டு போய் மக்கோணாவிலை சேர்க்கப் போறன் எண்டிட்டார்.

ஆனால் அந்தவருடம் நான் முக்கியமான பத்தாம் வகுப்பு ஓ.எல்.சோதினை எழுதிற வருடம்.அதாலை என்ரை படிப்புகெட்டுப்போக கூடாதெண்டு அதிபர் சொல்லியும் அப்பா அடம் பிடிச்சு கேக்காததால். எங்கை படிச்சாலும் மானிப்பாய் இந்துவிற்குதான் எனது சோதினை பேப்பர் வரும் எண்டதாலை அங்கை வந்து சோதினை எழுதச் சொல்லி அதிபர் அனுப்பி விட்டார்.

அப்பா சேட்டிபிக்கற்றை வாங்கிக்கொண்டு என்னையும் கூட்டிக்கொண்டு வீட்டை வந்ததுதான் வேலியிலை நிண்ட பூவரசம் தடி கனக்க முறிஞ்சு தும்பாய் பறந்திது. வீட்டிலை அம்மா பக்கத்து வீட்டிலை இருந்த சின்னம்மா அம்மம்மா எண்டு எல்லாரும் என க்கு முடிஞ்சளவு அடிவிழாமல் பாதுகாப்பு அரண்அமைச்சு காப்பாத்தி அடிவிழுந்து வெடிச்ச இடங்களுக்கெல்லாம்நல்லெண்ணை பூசி விட்டிச்சினம்.

நான் விக்கி விக்கி அழுதபடி போய் படுத்தாலும் என்னை மக்கோணாவிலை சேர்க்க போகினம் எண்டுஅடுத்த கவலை. சிறுவர் சீர்திருத்தப்பள்ளியான மக்கோணா இது அச்சுவேலி, வசாவிளான் எண்டிற ஊருக்கு இடையிலை இருந்தது. எண்பதுகளின்ரை இறுதிக்குபின்னர் இது இயங்கவில்லை.

மக்கோணா பள்ளிக்கூடம் எண்டிறதை விட சிறுவர்களின்ரை சிறை எண்டு சொல்லலாம். அங்கை யாரையாவது சேர்த்த உடனையே மொட்டையடிச்சு சீருடை குடுத்து அவருக் கொரு சாப்பாட்டுத்தட்டு எல்லாம் குடுத்திடு வினம். பிள்ளையளின்ரை தாய்தகப்பன்மட்டும் தான் வந்து கூட்டிக் கொண்டு போகலாம் மற்ற படி வெளியாலை போக இயலாது.தங்கிறது படிக்கிறது சின்னச்சின்ன வேலையள் எல்லாம் உள்ளைதான்.

நானும் குளப்படி செய்யிற நேரத்திலை அப்பா எனக்கு அடிச்சுப்போட்டு ' டேய் உன்னை ஒருநாளைக்கு மக்கோணாவிலை கொண்டு போய் விட்டிட்டு வருவன்எண்டு அடிக்கடி சொல்லுறவர். பள்ளிக்கூடத்தாலை வெளியேத்தினதாலை அடுத்தது மக்கோணா தான் எண்டு எனக்கும் பயம்வந்திட்டிது. நான் வயதுக்கு வந்த குமர்பிள்ளையை போல மற்றவர்கள் என்ன கதைக்கினம் எண்டதை கேட்டபடி அன்று முழுக்க அறையிலேயே படுத்துக் கிடந்தன்.

அன்றிரவு எங்கடை வீட்டிலை சொந்தபந்தம் எல்லாம் சேந்து அடுத்ததாய் எனக்கு என்ன செய்யலாமெண்டு ஒரு குட்டி மகாநாடு நடந்தது.

ஒரு பிள்ளை என்ன பிழை செய்தாலும் தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை விட அவனது சினேகிதங்களையே அதிகமாய் குறைசொல்லு வினம். அது எங்கள் சமூகத்தில் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. என்ரை பிரச்சனை க்கும் என்ரை சினேகிதங்களையே எல்லாரும் திட்டித் தீர்த்தனர்.

நான் ஊரிலை அளவுக்கதிமான சினேகித்த் தாலை கெட்டுப் போனன் எண்டும் அதாலை என்னை கொழும்பிலை இருந்த மாமாவிட்டை அனுப்பி அங்கை படிப்பிக்கலாமெண்டு அம்மா ஒரு ஆலோசனையை சமர்ப்பித்தார்.

ஊரிலை நாய்க்குட்டியை பெட்டியிலை கட்டி இரண்டு ஊர்தள்ளி கொண்டு போய் விட்டிட்டு வாறமாதிரி என்னையும் ரெண்டு ஊர்தள்ளிக் கொண்டு போய் விட்டினம்

'இவன் இஞ்சையே இப்பிடியெண்டால் கொழும்புக்கு போனால் சொல்லத் தேவை யில்லை இன்னும் மேசமாய் போயிடுவான்' இது அப்பாவின் குரல்.

அவர்அடிக்கடி வியாபார விசயமாய் கொழும்பு போய் வாறதாலை அவரின்ரை சொந்த அனுபவமாய் இருந்திருக்கலாம். அப்ப இந்தியாவுக்கு அனுப்புவம் எண்டு சித்தியின் அடுத்த ஆலோசனை.

'வேண்டாம் இப்பிடித்தான் பாக்கியநாத னின்ரை பெடியை படிக்க இந்தியாவுக்கு அனுப்ப அவன் அங்கை புளொட்டுக்கு (இயக்கம்) போட்டானாம் இவனும் இஞ்சை நோட்டிசுகளோடை திரியிறான் எண்டு கேள்வி' எண்டு சித்தப்பாவின் இழுவை.

இப்பிடி மாறி மாறி எங்கடை இனப்பிரச்சனை தீர்வு மாதிரியே என்ரை படிப்பு பிரச்சனையும் தீர்வில்லாமல் இழுபட்டுகொண்டு போக கடைசியாய் சின்னம்மா ஒரு தீர்வுத்திட்டத்தை வைத்தார் அதாவது என்னை சினேகிதங்க ளோடை சேராமல் இருக்க யாழ்ப்பாணத்தி லேயே தூரமாய் ஒரு பாடசாலையில் சேர்ப்பது அங்கை எங்கடை உறவினர் தெரிஞ்சஆக்கள் இல்லாட்டி விடுதியிலை வைச்சு படிப்பிப்பது.

அப்பாவின் மக்கோணாத்திட்டம் கைவிடப் பட்டு இந்த யோசனை அதிகவாக்குகளால் நிறைவேறியது. ஒரு பாடசாலையில் இடைக்காலத்தில் ஒருவரை சேர்ப்பதென்பது கடினம். அதுவும் பத்தாம் வகுப்பில் சேர்ப்பது அதைவிட கடினமானது. ஆனாலும் எங்கடை குடும்பத்திலை சொந்தத்திலை அதிகமானவை வாத்திமார் எண்டதாலை எல்லாரும் தங்கடை செல்வாக்குகளை பயன்படுத்தி பிரபலமான எல்லாப்பள்ளிக்கூடங்களிலையும் முயற்சி செய்தினம். அவையளுக்கு என்ரை படிப்பு கெட்டுப் போகுது எண்டிற கவலையை விட தங்கடை குடும்பத்திலை ஒருத்தன் படிக்கேல்லையெண்ட அவமானம் தங்களுக்கு வந்திடுமெண்ட கௌரவப்பிரச்சினைதான் பெரிய கவலையாய் இருந்தது.

எல்லாப்பள்ளிக்கூடத்திலையும் தேடி கடைசியாய் ஒரு பாதிரியாரின்ரை உதவியாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியிலை இடமும் தங்க விடுதியும் கிடைச்சிது.

ஊரிலை நாய்க்குட்டியை பெட்டியிலை கட்டி இரண்டு ஊர்தள்ளி கொண்டுபோய் விட்டிட்டு வாறமாதிரி. என்னையும் பெட்டி கட்டி (உடுப்பு களை) என்னட்டை சைக்கிள் இருந்தால் எப்பிடி யும் ஊர்ப்பக்கம் வருவன் எண்டதாலை அப்பா தன்ரை சைக்கிளிலையே என்னை ஏத்திக்கொண்டு போய் வட்டுக்கோட்டையிலை விட்டிட்டு தேவையெண்டால் நாங்கள் வந்து உன்னை பாக்கிறம் நீ ஊர்ப்பக்கம் வரவேண் டாம் எண்டு சொல்லிப் போட்டு போட்டார்.

நானும் ஊரையும் சினேகிதங்களையும் விட்டுப் பிரிந்த சோகத்திலை முதல் கிழமை ஏதோ பள்ளிக்கூடம் போகவேணும் எண்ட கட்டாயத்துக்காக போய் வகுப்பிலை இருந்திட்டு எழும்பி வந்து கொண்டிருந்தன். யாரோடையுமே கதைக்கவில்லை அதேபோலத்தான் விடுதியிலையும் என்ரை பேரை கேக்கிறவைக்கு மட்டும் பெயரையும் ஊரையும் சொல்லிப்போட்டு என்பாட்டிலை எதையாவது படிச்சுக்கொண்டிருப்பன்.

இப்பிடியே முதல் கிழமை லீவு நாளும் வந்தது. விடுதியிலை பலர் வீடுகளுக்கு போய்விட தூரஇடங்களிலை இருந்து வந்து படிச்சவைமட்டும் அங்கையே ஊர் சுத்தவும் விளையாட்டு மைதானத்துக்கும் போடுவினம். கிறிக்கற் விளையாடப்போறம் வாறியா எண்டு சிலர் வந்து கேட்டிச்சினம். இல்லையெண்டு தலையாட்டிப்போட்டு திரும்ப படுத்திட்டன்.

என்ரை நினைப்பெல்லாம் அண்டைக்கு லீவுநாள் என்ரை சினேகிதம் எல்லாம் கோயில் தேர்முட்டியிலை இருந்து கும்மாளமடிக்கும். அதை நினைக்க உலகத்திலையே எனக்கு முதல் எதிரியாய் அப்பாமேலை கோவமாயும் அழுகையாவும் வத்தது.

அப்பவும் இந்த றாக்கிங்(பகிடிவதை) விடுதிகள் பல்கலைகழகங்களிலை இருந்தது. ஆனால் இப்ப சிலஇடங்களிலை நடக்கிற மாதிரியோ இல்லாட்டி தமிழ்சினிமாவிலை காட்டிற மாதிரியோ மோசமாயில்லை. ஏதாவது எங்கடை பொருளுகளை எடுத்து ஒழிச்சு வைப்பினம் இல்லாட்டி தண்ணியாலை எத்து வினம் அப்பிடித்தான் நானும் தலைகணிக் குள்ளை முகத்தை புதைச்சுபோட்டு படுத்திருக்க யாரோ சிலபேர் வந்து தண்ணியை எனக்குமேலை ஊத்திப்போட்டு ஓடினாங்கள். ஏற்கனவே கோபத்திலை இருந்த நான் தண்ணி ஊத்தினவையை கலைச்சு ஒருத்தனை பிடிச்சு எனக்குத் தெரிஞ்சிருந்த கராட்டியிலை ஒண்டை பழகிப்பாத்தன்.

அந்தப்பெடியனுக்கு மூக்கு உடைஞ்சதா பல்லுடைஞ்சதா எண்டு சரியாத் தெரியாது முகமெல்லாம் இரத்தம். பிறகென்ன அப்பிடியே விடுதியை விட்டு ஓடியந்திட்டன். ஊருக்கு பஸ்சிலை போக காசும் இல்லை றோட்டிலை சைக்கிளிலை போறவை யிட்டை அண்ணை நானும் வரட்டோ எண்டு கேட்டு நாலைஞ்சு சைக்கிள் காரரிட்டை மாறி மாறி ஏறி ஊருக்கு போய் சேந்திட்டன்.

பிறகென்ன நடந்திருக்கும் எண்டு நான் சொல்ல வேணுமே?

Fancy a website?

Stand out from the crowd!

orudirectory.com